DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 191/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | :முருகன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th November 2025.

2,3 **எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தேவிப்பட்டினத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மீன்வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி கார்ல்மார்க்ஸ்யை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும்தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 17.06.2015 ம் தேதி இரவு 8.30 மணிக்கு

நானும், என் ஊரை சேர்ந்த ஆனந்தராஜ் என்பவரும்ராஜபாளையம் பஸ்ஸ்டாண்ட் அருகில் இருந்தபோது அங்கு வந்த எதிரி கார்ல்மார்க்ஸ்யை திருவேங்கடம் போலீசார் எங்கள் முன்னிலையில் கைது செய்தார்கள் என்றும், அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் திருவேங்கடம் பகுதியில் பல்வேறு பகுதிகளில் திருடியதாகவும், திருடுவதற்கு பயன்படுத்தி இரண்டு பைக்குகளையும், ஸ்குருடிரைவரையும் மற்றும் திருடிய சோனி டிவியையும், திருடிய பணத்தில் வாங்கிய செல்போனையும் ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிக்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**